(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 32.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2020 நவம்பர் 26, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

50/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள அரசாங்க பாடசாலைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பாடத்திற்கும் ஏற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்சமயம் கடமையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஏற்ப தற்சமயம் நிலவும் வெற்றிடங்கள் யாதென்பதையும்;

(v) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

123/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்திற்கென இலங்கை முதலீட்டுச் சபையினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) அக்காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) அக்காணிகள் கையகப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) அக்காணிகளுக்காகச் செலுத்தப்பட்ட பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(v) அக்காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட முறை யாதென்பதையும்;

(vi) தற்போது அக்காணிகளில் காணப்படுகின்ற தென்னை மரங்களின் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதும் அவற்றுக்கான விளைச்சல்களைப் பெறுகின்றதுமான நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

414/2020

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது, விளக்கமறியல் இல்லங்கள், சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகள், பொறுப்பேற்கும் இல்லங்கள் மற்றும் தடுப்புக்காவல் இல்லங்கள் ஆகியவற்றில் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாக அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேலே தரப்பட்ட ஒவ்வொரு நிறுவனங்கள் தொடர்பாக -

(i) சிறுவர் ஒருவரின் தங்கியிருக்கும் சராசரி காலப்பகுதியையும்;

(ii) சிறுவர் ஒருவருக்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தின் அளவையும்;

(iii) இணைக்கப்பட்டுள்ள பணியாளர்களின் வகுதிகள் மற்றும் அடிப்படைத் தகைமைகளையும்;

(iv) பணியாட்டொகுதியினர் – சிறுவர் விகிதத்தினையும்;

(v) சிறுவர்களை சமூகத்தினுள் மீள் ஒன்றிணைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும்;

(vi) இந்த சிறுவர்களின் நலன்களை உறுதிசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்;

(vii) இந்த நிறுவனங்களைக் கண்காணிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) 2015 முதல் 2019 வரையான காலப்பகுதி தொடர்பாக –

(i) மேலே தரப்பட்ட நிறுவனங்கள் ஒவ்வொன்றினதும் அனுமதி பெற்ற மற்றும் விலகிச் சென்ற;

(ii) விலகிச் சென்று வெற்றிகரமாகத் தொழில் பெற்று சமூகத்தில் பாதுகாப்பாக வாழுகின்ற;

சிறுவர்களின் எண்ணிக்கையை அவர் மேலும் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

436/2020

கௌரவ சாந்த பண்டார,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காணி இல்லாத மற்றும் இதுவரையில் குடியிருக்கும் காணிக்கு உறுதி அற்ற பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் இலங்கையில் உள்ளனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி குடும்பங்கள் வெவ்வேறாக அடையாளங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) குடியிருக்கும் காணிக்கு உறுதியில்லாத குடும்பங்களுக்கு உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) குடியிருப்பதற்கு காணி இல்லாத குடும்பங்களுக்கு காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில் அதற்கான காணிகள் அடையாளங் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

481/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் மாவட்டத்தின் வனாதவில்லு, பழைய எழுவாங்குளம் பிரதேசத்தில் நீண்டகாலமாக அகழ்வு அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோத மணல் அகழ்வு வியாபாரம் இடம்பெற்று வருவதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி சட்டவிரோத மணல் அகழ்வு வியாபாராத்தைத் தடுப்பதற்கு அமைச்சினால் —

(i) இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்;

(ii) எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள்;

யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

507/2020

கௌரவ ஜகத் குமார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் அரசியல் அடிப்படையில் சமுர்த்தி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அதன் காரணமாக தகைமை பெற்ற பெருமளவிலானவர்களுக்கு மேற்படி உதவித்தொகை கிடைக்கவில்லையென ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) "சுபீட்சத்திற்கான நோக்கு" கொள்கை பிரகடனத்தின் படி சமுர்த்தி உதவித் தொகை கிடைக்கப் பெறாதவர்களுக்கு அவற்றை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(v) சமுர்த்தி உதவித் தொகையின் பெறுமதியை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(vi) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சமுர்த்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எவ்வித பதவியுயர்வும் கிடைக்கவில்லையென ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி பதவியுயர்வுகளை பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போதைய அரசாங்கத்தினால் சமுர்த்தி திட்டத்தினதும் சமுர்த்தி உத்தியோகத்தர்களினதும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பல அமைச்சரவை பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சரவை பத்திரங்கள் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகள் யாவையென்பதையும்;

(iii) இற்றைவரையில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

7.

524/2020

கௌரவ ரோஹன பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை;

(ii) மேற்படி பாடசாலைகளில் நிரந்தர அதிபர்களை கொண்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை;

(iii) இன்றளவில் பதில் கடமையாற்றும் அதிபர்களை கொண்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்க பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்களை நியமிப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

732/2020

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடுகளுக்கிடையே பொருட்களை விற்பனை செய்வதற்கு இலகுமான முறை "ஈ – வர்த்தகம்" (E—Commerce) இணையத்தளமூடான விற்பனையாக இருப்பதனால், அதற்காக சுமார் 305 மில்லியன் அளவிலான உலக மக்கள் "பே பேல்" (Pay Pal) மற்றும் "கேட்வே" (Gateway) என்பவற்றைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதையும்;

(ii) இலங்கையின் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு மேற்படி முறையினைப் பயன்படுத்த முடியுமென்பதையும்;

(iii) இலங்கை மத்திய வங்கியால் மேற்படி முறையானது இலங்கையில் ஆரம்பிக்கப்படாமையால் பொருட்கள் / சேவைகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்து, அந்நியச் செலாவணியை பெறக்கூடிய வருமான வழியானது தடைப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) இலங்கையில் காணப்படுகின்ற "இணையவழி" (online) முறைக்கமைய சேவைகளை வழங்கும் சிறுவனங்கள் வெளிநாட்டு முகவரிகளைப் பயன்படுத்தி "பே பேல்" (Pay Pal) கணக்குகளைத் தயார் செய்கின்றன என்பதையும்;

(v) இதன் காரணமாக இலங்கைக்கு கிடைக்கக் கூடிய பெருமளவு நிதியை தரகுப் பணமாக வெளிநாடுகளுக்குச் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையின் உற்பத்திகள், சேவைகள் "இணையவழி" (online) முறைமைக்கமைய வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கையில் காணப்படும் தடைகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

வர்த்தக அமைச்சர்,— புலமைச் சொத்து (திருத்தம்),— 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

நீதி அமைச்சர்,— சான்று (திருத்தம்),— (14 ஆம் அத்தியாயமான) சான்று கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

3.

நீதி அமைச்சர்,— பிணை (திருத்தம்),— 1997 ஆம் அண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ 1.

ஒதுக்கீட்டுச் (2021) சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட எட்டாவது நாள்) — குழு ஆய்நிலை. (பரிசீலனை, நவம்பர் 25)

* 2.

கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

குறைந்தபட்ச வேதனங்கள் (இந்தியத் தொழிலாளர்கள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் 112 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2019 ஏப்ரல் 08 ஆம் திகதிய 2118/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.11.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் (2021) சட்டமூலம் எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் “தினப்பணிக்கான அனுபந்தம்” எனும் தனியிதழிற் பார்க்க.

---